பக்கங்கள்: 12

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 07 செவ்வாய்க்கிழமை 24.10.2023 கதிர் 347

# அமைச்சரவை மாற்றம் என ஜனாதிபதி ரணில் நாடகம்

## சுகாதார அமைச்சர் மாற்றம் குறித்து சஜித் கடும் விமர்சனம்

அமைச்சரவைக்குள் ஆள்களை மாற்றி நாடகமாடுகிறார் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கஎன்றுஎதிர்க்கட்சித் தலைவர்சஜித்பிரேமதாசதெரிவித்தார்.

அமைச்சரவை மாற்றம் சம்பந்தமாக அவர் விடுத்துள்ள ஊடக அறிவிப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அமைச்சரவைக்குள் வியத்தகு வகையில் ஆட்களை மாற்றி நகைச்சுவையான அரசியல் அதிகார நாடகத்தினை ஜனாதிபதி தலைமையிலான ஆட்சி அரங்கேற்றியுள்ளது.

எதிர்க்கட்சியும், நாட்டு மக்களும், தோல்வி அடைந்தவர் என்று தொடர்ச்சியாகக் கூறிவந்த சுகாதார அமைச்சரிடத்தில் சுற்றுச்சூழல் விடயம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய செயற்பாடுகள் மூலமாக ஸ்மார்ட் நாடு அல்ல ஜில்மார்ட் நாடே உருவாகும். ஆகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உருவாக்க முனையும் சிமார்ட் நாடு இதுவா என்ற கேள்வி எழுகின்றது.

நாட்டின் சுகாதாரத்துறையில் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

அடுத்த வருடத்தில் எப்படியும் ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் என்று ஜனாதிபதி ரணில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில் அறிவித்தார். சொன்னதெல்லாவற்றையும் செய்யக்கூடியவர் அல்லர் அவர் என்றாலும், அவரது நடவடிக்கைகள் எல்லாமே ஜனாதிபதித் தேர்தலில் தன்னை வெல்ல வைப்பதை நோக்கமாகக் கொண்டவைதான் என்பதை அவர் மீண்டும் ஒரு தடவை நிரூபித்துள்ளார்.

சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை அந்தப் பதவியில் இருந்து அகற்றியதும் அந்தப் பதவிக்கு ரமேஸ் பத்திரன நியமிக்கப்பட்டமையும்கூட அதே நோக்கத்தோடுதான். கெஹலிய மீது கடுமையான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு எதிர்க்கட்சிகள் அவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மான வரைவு கொண்டு வரப்பட்டபோது அதனைத் தோற்கடிப்பதில் ☞ 2

## ரணிலின் திட்டங்களுக்கு பெரமுன தொடர் ஆதரவு

ரணிலின் பொருளாதாரத் திட்டங்களுக்குத் தொடர்ந்து ஆதரவளிப்போம் என்று பொதுஜன பெரமுனவின் நாடாளு மன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவிக்கையில்,

பத்தரமுல்லவில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சி முன்னெடுக்கின்ற ☞ 2

## சுகாதார அமைச்சர் மாற்றத்துக்கு அதிகாரிகள் மீது விழுகிறது பழி

### அவர்கள் ஒத்துழைக்காததே காரணமாம்

சுகாதாரத்துறை அதிகாரிகள் அமைச்சர் கெஹலியவுக்கு ஒத்துழைப்பு வழங்காத காரணத்தால்தான் அவர் அமைச்சுப் பதவியில் இருந்து மாற்றப்பட்டார் என்று ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிப்பாளர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

அமைச்சரவை மாற்றம் சம்பந்தமாக செய்தியாளர்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சியும், அதன் ஆதரவுச் சக்திகளும் நாட்டுக்குள் அவர்களது திட்டங்களை முன்னெடுக்கமுடியாது போனமையினால் தற்போது ஆட்சியாளர்களை விமர்சிக்கின்ற நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளன.

எதிர்கட்சியினர் சுகாதாரத்துறையை பயன்படுத்தியே தமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்தனர். என்னைப் பொறுத்தவரையில் சுகாதாரத்துறையினை முகாமைத்துவம் செய்வதில் சில சிக்கல்கள் ஏற்பட்டுள்ளமையை ஏற்றுக்கொள்கின்றேன்.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவைப் பொறுத்தவரையில் இதற்கு முன்னதாக வகித்த அனைத்து அமைச்சுப் பதவிகளிலும் அவர் சிறப்பான பெறுபேறுகளைக் கொண்டிருக்கின்றார். ஆனால் அவர் சுகாதாரத்துறை அமைச்சுப்பொறுப்பினை ஏற்றதன் பின்னர் அவருக்கு சுகாதாரத்துறை அதிகாரிகள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கவில்லை. இதனால் சில பின்னடைவுகள் ஏற்பட்டன.

தரமற்ற மருந்துகள் இறக்குமதி தொடர்பில் ☞ 8

## அமைச்சரவை மாற்றத்திற்கு பொது ஜன பெரமுன எதிர்ப்பு

### கெஹலியவின் மாற்றம் முற்றிலும் தவறு என்று கட்சியின் செயலாளர் காட்டம்

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை சுகாதாரத்துறை அமைச்சர் பதவியில் இருந்து மாற்றும் ஜனாதிபதியின் முடிவு தவறானது என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி கடுமையாக விமர்சித்துள்ளது.

அமைச்சரவை மாற்றம் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய கட்சியின் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் ரணிலின் முடிவைக் காட்டமாக விமர்சித்தார்.

கெஹலியவுக்கு எதிராகப் ☞ 2

## மின்சார சபை மறுசீரமைப்பு திட்டம் அடுத்த வாரத்தில் அமைச்சரவைக்கு

இலங்கை மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பான முன்மொழிவுகள் அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மின் கட்டணத் திருத்தத்துக்கு, பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவினால் கடந்த வாரம் மின்சார சபைக்கு அனுமதி அளிக்கப்பட்டது. அதன்படி, ஒக்டோபர் 21 ஆம் திகதி முதல், எதிர்வரும் சில மாதங்களுக்கு தற்போதுள்ள மின்கட்டணத்தை சுமார்

### 3 மாத சம்பளத்தைக் கேட்டு

## ஆடைத் தொழிற்சாலையின் தொழிலாளர்கள் போராட்டம்



தமது மூன்று மாத காலச் சம்பளப் ☞ 8

## ரணிலின் ஆட்சிக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் போராட்டம்

### விரைவில் நடக்கும் என ஜேவிபி தெரிவிப்பு

ரணிலின் ஆட்சிக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் விரைவில் ஜேவிபி போராட்டங்களை முன்னெடுக்கும் என்று அந்தக் கட்சியின் தேசிய நிறைவேற்றுக்குழு உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

ரணில் - ராஜபக்ச ஆட்சி வீட்டுக்கு செல்ல வேண்டும். இந்த ஆட்சிக்கு எதிராக நாங்கள் வீதியில் இறங்குவோம்.

இந்த வருடம் மூன்றாவது முறையும் மின் கட்டணம் ☞ 8

## தூத்துக்குடியில் இருந்தும் விரைவில் காங்கேசன்துறைக்கு கப்பல் சேவை

### பூர்வாங்க நடவடிக்கைகள் தொடக்கம்

இந்தியாவின் தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து இலங்கையின் காங்கேசன்துறைக்கு பயணிகள் கப்பல் சேவை விரைவில் தொடங்கப்படும் என்று இந்தியத் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையகம் இதற்காக துபாய் கப்பல் நிறுவனம் ஒன்றுடன் நேற்றுக் ☞ 2

## மன்னார் மீனவர்கள் 8 பேர் இந்திய படைகளால் கைது

### கடத்தலில் ஈடுபட்டனர் என்று குற்றச்சாட்டு





ந.லோகதயாளன்

இந்திய கடற்பரப்பில் ஊடுருவி கடத்தலில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு மன்னாரைச் சேர்ந்த 8 மீனவர்களை இந்திய கரையோர காவல்படையினர் கைது செய்து படகுகளுடன் மண்டபம் கரையோர காவல்படை முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இந்திய ☞ 2

## பொதுமக்கள் கத்திக் கதறினாலும் கண் திறக்காத ஆட்சியாளர்கள்

### ஓமல்பே சோபித தேரர் சாடல்

பொதுமக்கள் பிரச்சினைகளுக்காக கதறுகின்றபோதும் ஆட்சியாளர்கள் கண்களைத் திறக்காத நிலைமையிலேயே உள்ளார் என்று கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இதைத்

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

ரணில் தீவிரமாக இருந்தார். எதிர்க் கட்சிகளின் முயற்சியைத் தோற்கடிப்பது மட்டுமல்ல ஆளும் தரப்பின் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான சந்தர்ப்பமாகவும் அவர் அதனைப் பயன்படுத்திக்கொண்டார்.

நம்பிக்கையில்லாத் தீர்மான வரைவு தோற்கடிக்கப்பட்ட பின்னரும் கெஹலிய மீது தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டுவந்தன. மக்களின் வாழ்வுடன் மிக நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ள சுகாதாரத்துறையில் தொடர்ந்து ஊழல்களும், முறைகேடுகளும் இடம்பெறுவதாக ஊடகங்களும் தொடர்ந்து தெரிவித்தன. தரமற்ற மருந்துக் குற்றச்சாட்டு பெரியளவில் தொடர்ந்தது. இந்த நிலைமை தொடர்ந்தால் தனது தேர்தல் கனவுகளுக்குஆப்புவரும்என்பதால் கெஹலியவைக் கழற்றிவிடும் முடிவுக்கு ரணில் வந்தார்.

இப்போதல்லசிலவாரங்களுக்கு முன்னரே ரணில் அந்த முடிவுக்கு வந்துவிட்டார். அவர் அமைச்சரவையில் உள்ளக மாற்றங்களைச்செய்வார்என்பதும் அதில் சுகாதார அமைச்சரே முதல் இலக்காக இருப்பார் என்பதும் முன்னரே அறியப்பட்ட விடயங்களாகவே இருந்தன. ஆனால், அவரது இடத்திற்கு ரமேஷ் பத்திரனவைக் கொண்டு வந்ததன் மூலம் தனது ஜனாதிபதிக் கனவுக்கான ஆதரவுத் தளத்தை விரிவாக்கியிருக்கிறார் ரணில்.

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறீ லங்கா சுதந்திரக் கட்சி அடுத்த ஜனாதிபதித் தேர்தலில்ரணிலின்கூட்டணிக்குள் ஐக்கியமாவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்து வருகின்றன. இந்த விடயத்தில் கட்சியின் மூத்த உறுப்பினர்களான நிமல் சிறிபால டிசில்வா போன்றவர்களின் மூ-லம் சிறீசேனவுடன் ஓர் இணக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை நோக்கமாகக் கொண்டு அமைக்கப்படவுள்ளஐக்கியதேசியக் கட்சி. பொது ஜன பெரமுனவில் இருந்து பிரிந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கிய கூட்டணியில் சிறீ லங்கா சுதந்திரக் கட்சி ஒரு முக்கியமான இடத்தைப் வகிக்கும். அதற்கானசமிக்ஞையாக, வெளிப்பாடாக,நல்லெண்ணமாகவே ரமேஸ் பத்திரனவுக்கு சுகாதார அமைச்சர்பதவிவழங்கப்பட்டுள்ளது.

இத்தகைய நுணுக்கமான நகர்வுகள் மூலமாகத் தனது ஜனாதிபதித் தேர்தல் கனவுகளை மெய்ப்படவைக்கரணில்காய்களை நகர்த்தி வருகின்றார். ஆனால், அது வெற்றியளிக்கும் நகர்வுகளா என்பதைமக்களேதீர்மானிப்பார்கள்.

................

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில்இருந்துஆளும்தரப்புக்குத் தாவிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் அகமட்டின் பதவி நீதிமன்றத்தீர்ப்பால்பறிக்கப்பட்டதை அடுத்துஇவ்வாறுகட்சிதாவியவர்கள் மீது ஒழுக்காற்றுநடவடிக்கைகளை எடுப்பதில் ஐக்கிய மக்கள் சக்தி மேலும் தீவிரம் காட்டி வருகின்றது.

ஏற்கனவே அந்தக் கட்சியில் இருந்து ஆளும் தரப்புக்குத் தாவிய மனுஷ நாணயக்கார, ஹரின் பெர்னான்டோ ஆகியோர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனை எதிர்த்து அவர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். அந்த வழக்குகளை வெல்ல முடியும் என்ற நம்பிக்கை முஸ்லிம் காங்கிரஸின் வழக்கைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள நிலையில் கட்சி தாவிய ஏனையவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்துவதில் அந்தக் கட்சி இப்போது கவனம் செலுத்துகின்றது.

அந்த வகையில் தமது கட்சியில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களாகிவிட்டு இப்போது தமது கட்சியிலிருந்து விலகி, அதன் முடிவுகளுக்குக் கட்டுப்படாமல், வெளிப்படையாகவே ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவாகச் செயற்படும் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதென கட்சி தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்றஉறுப்பினர்களான எம்.எச்.எம்.பௌஸிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது என்றும், நாடாளுமன்ற உறுப்பினரான வடிவேல் சுரேஸை கட்சியிலிருந்து வெளியேற்றுவது என்றும் ஆளும் தரப்புப் பக்கம் தாவி அமைச்சுப் பதவியையும் பெற்றுக்கொண்ட அரவிந்த குமாரை நாடாளுமன்றப் பதவியிலிருந்து நீக்கும்படி தேர்தல்கள் ஆணைக் குழுவுக்குஅறிவிப்பதுஎன்றும்ஐக்கிய மக்கள் சக்தி முடிவெடுத்துள்ளது.

இந்த நடவடிக்கைகள் வெற்றிபெற்றால் ஏனைய கட்சிகளும்கூட இந்த வழியில் செல்வதற்கு வாய்ப்புக்கள் அதிகரிக்கும்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## அமைச்சரவை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீழ்ச்சி ஏற்பாட்டாலும் அவரை தாம் நம்புகின்றனர்என்றுகூறிஇறுதியாக சுகாதார அமைச்சராக இருந்த கெஹலியவுக்கு வாக்களித்தவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

அதுமட்டுமன்றி, முன்னாள் சுகாதார அமைச்சருக்கு ஆதரவாக 113 பெரும்பான்மையை காண்பித்தவர்களின் நம்பிக்கை நிர்வாணமாக்கப்பட்டுள்ளதுஎன்றார்.

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்விதமான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப் புக்களை வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே சிறீ லங்கா பொது ஜன பெரமுன உள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷவிற்கு பின்னர் ரணில் விக்கிரமசிங்க, தலைமைத்துவத்தினைப் பெற்றுக்கொணடுள்ளார். அவருக்கு 135 பேர் ஆதரவளித்துள்ளனர்.

அவ்வாறான நிலையில் ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் பொருளாதாரஅபிவிருத்திதொடர்பான திட்டங்களுக்கும் நாம் தொடர்ந்து ஆதரவளிப்போம் என்றார்.

## தூத்துக்குடியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவின் வர்த்தகத் தலைநகரான -மும்பையில் ஒப்பந்தம் செய்துகொண்டது.

மும்பையில் இடம்பெற்ற சர்வதேச கடல்சார் மாநாட்டின் ஒரு நிகழ்வாக இந்த ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.இந்தியாவிற்கும் இலங்கைக்கு இடையில் பயணிகள் கப்பல்சேவையைநடத்துவதற்கான அனுமதியைப் பெறுவதற்கு இந்த நிறுவனம் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தூத்துக்குடி வ.உ.சி துறை முகத்தை மையமாகக் கொண்டு பல்வேறுஇடங்களுக்கும்பயணிகள் கப்பல் சேவையை வழங்க இந்த நிறுவனம்தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. துபாய் நிறுவனம் சேவையில் ஈடுபடுத்தவுள்ள கப்பலில் 300 பயணிகள் பயணிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான கப்பல் இன்னும் 2 மாதங்களில் தூத்துக்குடி துறை முகத்தை வந்தடையவுள்ளதாக வ.உ.சி துறைமுக ஆணையம் குறிப்பிட்டுள்ளது. அதன் பின்னர் உடனடியாக தூத்துக்குடி - காங்கேசன்துறை கப்பல் சேவை தொடங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையே, கொழும்பு - இராமேஸ்வரம் இடையே கப்பல் சேவைநடத்துவதற்கானமுயற்சிகள் எடுக்கப்படுகின்றனஎனவும்இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

## நாணய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல்லைக்குள் இந்திய படகு ஒன்றில் இருந்து இலங்கைப் படகுகள் நான்கிற்கு கடத்தல் பொருட்களை மாற்றிக்கொண்டிருந்த சமயமே இந்தியக் கரையோரக் காவல் படையினரால் இவர் கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் இன்று அதிகாலை தமிழகம் மண்டபம் பகுதியில் வைத்து இராமேஸ்வரம் கடலோரக் குழும பொலிஸாரான மரைன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மன்னார் மீனவர்கள் 8 பேருடன் தமிழகத்தைச்சேர்ந்த4மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## அமைச்சரவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொய்யான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன என்று சுட்டிக்காட்டிய அவர், இந்தக் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்பது நிரூபிக்கப்பட்ட பின்னரும் அவர் மாற்றப்பட்டது முற்றிலும் தவறு என்றார்.

இந்த விடயத்தில் சில நடவடிக்கைகளை எடுப்பது சரியானதாஎன்பதுகுறித்துஜனாதிபதி சிந்தித்திருக்கவேண்டும் என்றும் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய சுகாதார அமைச்சராக ரமேஷ் பத்திரனவை நியமிப்பது குறித்தஎமதுகட்சியின்அதிருப்தியை ஏற்கனவே ஜனாதிபதிக்குத் தெரிவித்துள்ளோம்.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர்பதவிகளைவழங்கியமை எமக்கு அதிருப்தியளிக்கின்றது.

இந்த நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காக ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும் அதிகளவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறீ லங்கா பொது ஜன பெரமுனவைச் சேர்ந்தவர்கள்.

இவ்வாறான சூழ்நிலையில் ஜனாதிபதி, சிறீ லங்கா பொது ஜன பெரமுனவின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களை அமைச்சரவையிலிருந்துநீக்கிவிட்டு சிறீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு அதனை வழங்குவது தவறான முடிவு. இதனை நாங்கள் கடுமையாக எதிர்க்கின்றோம் -- என்றார்.

## பொதுமக்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

குழந்தைகள் பாலுக்காக அழுகின்றபோது தாயார் அதனைப் பெற்றுக்கொடுப்பார். தாய்மார் தூக்கத்திலிருந்தாலும்கூட குழந்தையின் தேவையை நிறைவேற்றுவதிலேயே குறியாக இருப்பார்கள்.

மொத்த நாட்டு மக்களும் வாழ்வதார நெருக்கடியால் கதறுகின்றார்கள். அவர்களின் தயாரான ஆட்சிகண்ணைத்திறந்து பார்ப்பதாக இல்லை - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

# மட்டு. வவுணதீவில் கடந்த வாரம் 10 வீடுகள் யானைகளால் சேதம்

## இரா.துரைரட்ணம் தகவல்




மட்டக்களப்பு - மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவில் கடந்த ஒரு வாரத்தில் யானைகளின் தாக்குதலால் 10 வீடுகள் உடைத்துள்ளதுடன் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளதுடன் தினந்தினம் யானைகளின் மீதுள்ள அச்சத்தால், மக்கள் குடிமனைகளில் இருந்து வெளியேறும் அவல நிலைஏற்பட்டுள்ளது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஊடக அறிக்கை ஒன்றை அவர் வெளியிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

குறித்த பிரதேச செயலகத்தின் கீழ் 75 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் 24 கிராமசேவகர் பிரிவுகளையும் 138 கிராமங்களை கொண்ட 10,817 குடும்பங்களைச் சேர்ந்த 33,357 சனத்தொகையையும், 23,679 வாக்காளர்களையும் உள்ளடக்கிய இப்பிரதேசத்தில் விவசாயம் மற்றும் மேட்டுநிலப் பயிர்ச்செய்கையை வாழ்வாதாரமாக பெரும்பான்மை யானமக்கள்செய்துவருகின்றனர்.

2007ஆம் ஆண்டு மக்கள் இடம்பெயர்ந்தபோது காட்டு யானைகள் எல்லைக் கிராமங்களான கெவிளியாமடு தொடக்கம் கற்பானை வரையுள்ள கிராமங்களுக்குள் நுழைந்து வீடுகளிலும் காணிகளிலும் உள்ள மர வகைகளான தென்னை, பனை, மா, பலா,வாழை, பப்பாசி, முந்திரிகை முதலிய மர வகைகளையும் நெல், அரிசி, சோளம்,கௌப்பி,இறுங்கு, எள்ளு முதலிய தானிய வகைகளையும் ஏனைய பயிர்களையும் உணவாக உட்கொண்டு சேதப்படுத்தியதுடன், அங்கிருந்த 400 இற்கு மேற்பட்ட தற்காலிக வாடிகள், கொட்டில்களையும் அழித்தன.

இந்நிலையில், கடந்த 19, 20, 21ஆம் திகதிகளில் ஆயித்தியமலை, நெல்லூரிலும் 6 ஆம் கட்டை நெடியமடுவிலும் 8 ஆம் கட்டை உன்னிச்சை, பாவற்கொடிச்சேனை போன்ற பிரதேசங்களில் குடிமனைகளுக்குள் காட்டு யானைகள் உள்நுழைந்து 8 பெரிய நிரந்தர வீடுகளையும் இரண்டு தற்காலிக வீடுகள் உட்பட 10 வீடுகளை உடைத்ததையடுத்து நித்திரையில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக மயிரிழையில் உயிர் தப்பினர்.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இப்பகுதி குடிமனைகளுக்குள் காட்டுயானைகள் உட்புகுந்து வீடுகள் மற்றும் தென்னை பயர்ச்செய்கைகளை சேதப்படுத்தி வருகின்றன. இதனால் அச்சமடைந்துள்ள மக்கள் விவசாயச் செய்கையைகைவிட்டுவீடுகளில்இருந்து இடம்பெயர்ந்துகொண்டே உள்ளனர்.

யானை தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு 10 லட்சம் நஸ்டஈடாக வழங்கினாலும், காயமடைந்தவர்களுக்கும், பாதிக்கப்பட்ட வீடுகளுக்கும், பாதிக்கப்பட்ட விவசாயத்துக்கும் ஒரு வருடத்துக்கு மேலாகியும் நஸ்டஈடு வழங்கப்படவில்லை. அதேவேளை பலர் பாதிக்கப்பட்ட வீடுகளை திருத்த முடியாமல், வீடும் இல்லாமல் நிர்க்கதியாகியுள்ளனர்.


எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அமைச்சும் ஏனோதானோ என்று இருப்பதை கைவிட்டு, ஒரு சரியான திட்டத்தை தயாரித்து செயல் வடிவத்தில் இறங்க வேண்டும்; இந்த பிரதேச மக்களை யானைகளிடமிருந்து காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் அந்த அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார். (05)

# வாழைச்சேனை பிரதேச சபை ஊழியர் ஒருவர் மீது தாக்குதல்

## தாக்கியவரைக் கைது செய்யுமாறுகோரிப் போராட்டம்!







கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேசசபை ஊழியர் மீது ஞாயிற்றுக்கிழமை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது 32 வயதுடைய பிரதேச சபை திண்மக்கழிவு அகற்றும் ஊழியரே தாக்கப்பட்டுள்ளார்.

மாவடிச்சேனை எம்.பி.சீ.எஸ். வீதியில் குறித்த நபர் திண்மக்கழிவு அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த நிலையில், அந்த வீதியிலுள்ள வர்த்தக நிலைய உரிமையாளருடன் ஏற்பட்ட முரண்பாட்டை தொடர்ந்து இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளின்போது தெரிய-வந்துள்ளது.

அப்பகுதியில் கடமை புரிந்த ஊழியர் தாக்கப்பட்டு, அவரது கையடக்கத் தொலைபேசியும் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக ஏனைய ஊழியர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து, தாக்குதலுக்குள்ளான ஊழியர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

ஊழியர் மீது தாக்குதல் மேற்கொண்ட நபரை பொலிஸார் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஏனைய ஊழியர்கள் திண்மக்கழிவு அகற்றும் இயந்திரங்களை குறித்த ஊழியர் தாக்கப்பட்ட வீதியில் நிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மன்னாரில் ஜனாதிபதி தலைமையில் தேசிய மீலாதுன் நபி விழா தொடக்கம்

## அனுமதி மறுக்கப்பட்ட பிராந்திய ஊடகவியலாளர்கள்





மன்னாரில் ஞாயிற்றுக்கிழமை காலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆரம்பமான தேசிய மீலாதுன் நபி விழாவில் கலந்துகொள்ள பிராந்திய ஊடகவியலாளர்களுக்கும், மாவட்ட செயலக ஊடக அலுவலருக்கும் அனுமதி வழங்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்துக்கான தேசிய மீலாதுன் நபி விழாவை இம்முறை மன்னார் மாவட்டத்தில் உள்ள முசலி தேசிய பாடசாலையில் நடத்துவதற்கான ஏற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தலைமையில் முழு ஏற்பாடும் செய்யப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக மன்னார் மற்றும் முசலியில் காதர் மஸ்தான் தலைமையில் பல்வேறு கலந்துரையாடல்களும் இடம்பெற்றன. எனினும், காதர் மஸ்தான் தேசிய மீலாதுன் நபி விழா ஏற்பாடுகள் குறித்து மன்னார் மாவட்டத்தில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்காமல் கொழும்பில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ஞாயிற்றுக் கிழமைகாலை 9.30 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் ஏற்பாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆரம்பமான தேசிய மீலாதுன் நபி விழாவில் கலந்துகொள்ளச் சென்ற பிராந்திய ஊடகவியலாளர்களுக்கும், மாவட்ட செயலக ஊடக அலுவலருக்கும் அனுமதி வழங்கப்படாமல், அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

ஒரு மதத்தை பிரதிபலிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் பிராந்திய ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படாமை மற்றும் இந்த நிகழ்வின் ஏற்பாட்டாளரான நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் செயற்பாடுகள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, காதர் மஸ்தானின் கட்சி சார்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, அரசியல் நிகழ்வு போன்று தேசிய மீலாதுன் நபி விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நிகழ்த்தப்படுவதாகவும் கவலை தெரிவித்துள்ளனர். (05)



# பெருமளவு கசிப்பு மற்றும் கோடாவுடன் யாழ். பலாலியில் சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், பலாலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மயிலிட்டி பகுதியில் 120 லீற்றர் கசிப்பு மற்றும் 800 லீற்றர் கோடாவுடன் 37 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்-யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பலாலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பதுளையில் ரயிலில் மோதுண்டு வயோதிபப் பெண் பரிதாப சாவு

கண்டியில் இருந்து பதுளை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த சரக்கு ரயிலில் மோதுண்டு வயோதிப பெண்ணொருவர் பலியான சம்பவம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

ஹாலிஎல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹாலிஎல -பதுளை ரயில் பாதையில் ஹப்புவத்தை பகுதியில் வைத்தே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் பலத்த காயமடைந்த நிலையில், பதுளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட குறித்த பெண், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனவும் ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண் பதுளை, ஹப்புவத்தை பகுதியை சேர்ந்த 80 வயதானவர் எனக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை ஹாலிஎல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# தேங்காய் பறிக்க தென்னையிலேறிய முதியவர் தவறி விழுந்து உயிரிழப்பு

*தேங்காய் பறிக்க தென்னை மரத்தில் ஏறிய முதியவர் தவறி விழுந்ததில் உயிரிழந்த சம்பவம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.*

*யாழ்ப்பாணம் - வரணி, நாவற்காட்டு பகுதியை சேர்ந்த 60 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார். (05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மக்களுக்கு மேலும் மேலும் சுமை அரசியல்வாதிகளுக்கு சொகுசு வாழ்வா?

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளமுடியாமல்நாடேதத்தளித்துக்கொண்டிருக்கும்போது, அரசசெலவினங்களைக்கட்டுப்படுத்துவதன்மூலம்தான் பொருளாதார நெருக்கடியைத் தீர்வு நோக்கி நகர்த்த முடியும் என்று பன்னாட்டு நாணய நிதியம் வலியுறுத்தி வருகின்றபோது நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை அதிகரிக்க ஆட்சியாளர்கள் முடிவு செய்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இது ரோம் தீப்பற்றி எரிந்தபோது பிடில் வாசித்த நீரோவுக்கு ஒப்பான செயலாகத் தெரிகின்றது.

விளிம்புநிலை மக்கள் தமது அன்றாட வாழ்க்கையை முன்னெடுக்கமுடியாமல்மூச்சுத்திணறிவரும்நிலையில் அவர்களுக்கு உதவிகளை வழங்கவேண்டும் என்றால், அவர்களைப் பாதுகாக்கவேண்டும் என்றால் அரசு வருமானத்தை அதிகரித்துச் செலவினங்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று நாணய நிதியம் வலியுறுத்துகின்றது.

அரசின் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்காகத்தான் அரச பணியாளர்களுக்கு 5 வருட சம்பளமற்ற விடுமுறை கொடுத்து வெளிநாடுகளில் சென்று வேலை செய்வதற்கு அனுமதித்திருக்கிறது இந்த ஆட்சி. அரச அதிகாரிகளுக்கு செலவுகளைக் கட்டுப்படுத்தும் விதத்தில் பல்வேறு கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. அரச அதிகாரிகள் என்போர் மக்களுக்கு சேவைகளை வழங்கும் நேரடி முகவர்கள். அவர்களின் செலவினங்களையே கட்டுப்படுத்தி மக்களுக்கானசேவைகளைமட்டுப்படுத்திவைத்திருக்கும் ஓர்ஆட்சி, நாடாளுமன்றஉறுப்பினர்களின்சம்பளங்களை அதிகரித்து அதன் மூலம் நாட்டின் செலவினத்தை அதிகரிப்பது எந்த வகையில் நியாயம்?

நாடாளுமன்றஉறுப்பினர்கள்மற்றும்அமைச்சர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பிலான முன்மொழிவு இந்தவார அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன. கடந்த காலங்களில் இதுபோன்றுநாடாளுமன்றஉறுப்பினர்களின்சம்பளத்தை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளுக்குக் கடும் எதிர்ப்பு காட்டப்பட்டு வந்த பின்புலத்திலு–ம் சம்பள அதிகரிப்புக்கானயோசனைமீண்டும்அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

தற்போது அனைத்துக் கொடுப்பனவுகளும் உள்ளடங்களாக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கிட்டத்தட்ட மூன்று இலட்சம் ரூபாய் வரை சம்பளம் பெறுகிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான யோசனையொன்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக் காலத்திலும் முன்மொழியப்பட்டது. என்றாலும், அதற்கு அவர் அனுமதி அளிக்கவில்லை என்பதுடன், அந்த யோசனை முற்றாக அவர் நிராகரிக்கப்பட்டது.

நாட்டைக் குட்டிச்சுவாரக்கி, வங்குரோத்து நிலைக்குத் தள்ளியவர்கள் மீண்டும் மீண்டும் சுகபோகத்தை அனுபவிக்க அவர்களுக்கும் சேர்த்து கடன் சுமையைச் சுமந்துகொண்டு அல்லல்படுவது மக்களின் தலைவிதியாகிவிட்டது. மீண்டும் அத்தகையதொரு நிலை ஏற்பட்டால் அதற்கெதிராக மக்கள் கிளர்ந்தெழத் தவறமாட்டார்கள்.

பொருட்களின் விலை அதிகரிப்பு, நாளாந்த வாழ்க்கைச் செலவு எகிறல், எரிபொருள் சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலைகள் மாதாந்தம் அதிகரிப்பு என்று சுமைக்கு மேல் சுமையைத் தாங்க முடியாமல் சுமக்கும் மக்கள் வாழ வழி தெரியாது தட்டுத் தடுமாறி வருகையில், அவர்களை அந்த நிலைமைக்குத் தள்ளிவிட்டவர்கள் மேலும் மேலும் சுகபோகங்களை அனுபவித்துக்கொண்டிருப்பதற்கு ஒருபோதும்அனுமதிக்கமாட்டார்கள்என்பதைஆட்சியில் உள்ளவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

# கற்பகதரு என்னும் அற்புதம்
# பயனளிக்கும் பனை மட்டை

**அங்கம் –20**



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.



பனையின் நாரைச் சாதாரணமாகஎண்ணிய எங்களுக்கு - படுத்து உறங்கவும் சுகமாக நித்திரை செய்யவும் கட்டிலின்ஆதாரமாய்ஆகியே வந்திருக்கிறது என்னும் செய்தி - பனையின் நாரின் மீது மதிப் பினை ஏற்படுத்தி நிற்கச்செய்திட வைத்திருக்கிறதல்லவா! தென்னையினைப் பிள்ளை என்று சொல்லியே பேணி வளர்க்கிறோம். பனையினை முற்றத்திலோ, வீட்டின் அருகிலோ வைத்திருக்கவே மாட்டோம். ஆனால் தென்னையினை வீட்டைச் சுற்றியே வைத்திருப்போம். தென்னை மரங்கள் சூழவுள்ள தென்னந் தோப்புக்குள் வீடுகளை அமைத்து மகிழ்ந்திருப்போம். அதேவேளை பனந்தோப்புக்குள் வீடமைத்து இருப் போமா என்பது கேள்விக்குறியாகும். தென்னையி னைப் பேணும் அளவுக்கு பனையினைப் பேணுகிறோமா என்று எண்ணிப்பார்த்திட வேண்டும். ஆனால் இதைப்பற்றியே பார்க்கும் நிலையிலே இல்லாமல் , பனையானது மிகவும் தாராளமாய் கொடுக்கும் அத்தனையையும் கொடுத்துத் திருப்தியடைந்தபடியேஇருக்கிறது. இதனால்த்தான் மாநில மரமாய் நிமிர்ந்து நிற்கிறது என்பது கரு த்திருத்த வேண்டிய விடயமெனலாம். படுத்துறங்கக் கட்டிலாய் அமையும் பனை நார், இருக்கவும் பல வகையில் கதிரைகளுக்கு ஆதாரமாய் அமைகிறது.பனை நார் நாற் காலிகள் - சாய்வு நாற்காலிகள், கைப்பிடியுள்ள நாற்காலிகள்,சுழல் நாற்காலிகள் , என்று பல வகைகளாய் அமைந்து மக்களின் பயன் பாட்டுக்குக் கைகொடுத்து நிற்கிறது.

அதுமட்டுமல்லாமல் – லொறிகள், பேருந்துகள், ஓட்டுநரின் இருப்பிடமாகவும் பயனாகி நிற்கிறது. பனை நாரினால் செய்யப்படும் இருக்கைகள் நீண்ட தூர பயணத்தில் ஓட்டுநர்களுக்கு மிகவும் சௌகரியமாக அமைகிறது. நீண்ட தூரப் பிரயாணமோ அல்லது தொடர்ந்து- நிதமும் பிரயாணம் செய்யும் பொழுது வாகனங்களின் இயந்திரத்தின் சூடும், தொடர்ந்து ஒரே இருப்பிடத்தில்அமரும்பொழுதுஏற்படும் சூடும் தணிப்பதற்கு , பனை நாரினால் ஆகிய இருக்கைகள் மிகவும் பொருத்தமானதாகவே இருக்கிறது.பனை நாரினால் ஆகிய இருக்கைகள் மிகவும் பாதுகாப்பானவை. அத்துடன் உடல் ஆரோக்கியத்துக்கும் உகந்தவை என்பது முக்கியமாகும். இன்று செயற்கை நாரான பிளாஸ்டிக் முன்னணிக்கு வந்து இயற்கையான பனை நாரினைப் புறந்தள்ளி விடும் நிலைக்கு வந்திருக்கிறது. செயற்கை நார்கள் பார்ப்பதற்குக் கவர்ச்சியாய் இருந்தாலும், இயற்கையான பனை நாரின் ஆரோக்கியத்துக்கு எந்த வகையிலும் ஈடாகாது என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மை என்றுதான் சொல்ல வேண்டும்.

முதலாம் நிலையில் நிற்கின்ற அகணி நார் மிகவும் வலிமை மிக்கதால்த்தான் கட்டிலுக்கும் இருக்கைகளுக்கும் கைகொடுத்து நிற்கிறது.இதன் வலிமையினைக் குறித்து ஆயிரம் அகணியால் கட்டிய வீட்டுக்கு ஆனையின் பலம் என்று சொல்லும் ஒரு வழமையும் பழக்கத்தில் இருந்து வருகிறது.அது மட்டுமல்ல - நார் முடி சேரல் என்று தமிழ் மன்னனுக்குப் பட்டம் சூட்டிப் பெருமைப் பட்டதாகவும் அறியமுடிகிறது. இதன்படி பார்க்கும் பொழுது பனை நாரை கிரீடமாய் அந்த மன்னன் அணிந்திருக்கிறான் என்பது தெரிய வருகிறதல்லவா. மன்னனின் முடியாயும் இருக்கும் மகத்துவத்தைப் பனைநார்பெற்றிருக்கிறதென்றால் - பனை மட்டையையோ , பனை நாரையோ சாதாரணமாகக் கருதி விடல் கூடாது என்பதைக் கருத்திருத்தல் கட்டாயமாகும்.

முதலாம் நிலையில் வைக்கப்படும் அகணிநார் உரித்து எடுக்கப்பட்ட பின்னர்தான் இரண்டாம் தரத்தில் இருக்கும் புறணி நார் எடுக்கப்படுகிறது. முதலாந் தரம் எடுக்கப்பட்ட பனை மட்டையினை நிமிர்த்திப் போடாமல் குப்புறப் போட போடப்படுகிறது. அதன் பின்னர் கத்தியைக் கொண்டு மட்டையினது குறுக்காக மூன்று அங்குல அகலத்துக்குக் கிழித்தெடுக்கப்படுகிறது.கிழித்து எடுக்கப்பட்டு வரும் நார் மெதுவாக வார ப்படுகிறது.அப்பொழுது இரண்டாம் தரமுடைய புறணி நார் வருகிறது.வார்ந்து எடுக்கப்படும் நார் உலர வைக்கப்படுகிறது. உலர்ந்த நிலையில் இருக்கும் அந்தப் புறணி நாரினை சத்தகம் என்னும் கத்தி கொண்டு ,நாரின் உட்புறத்தில் காணப்படும் சோத்திகள் நீக்கப்படுகிறது . சோத்திகள் நீக்கப்பட்ட பின் , அந்த நார் பிரம்பினால் வருகின்ற நாரைப் போல தோற்றத்தை அளித்து நிற்கும்.

இந்தப் புறணி நார் பல நிலைகளில் கைத் தொழிலுக்கான மூலப் பொருளாய் அமைகிறது என்பதும் குறிப்பிடப்பட வேண்டிய விடயமெனலாம். பலவித மான கூடைகள் செய்வதற்கு இந்த நார் கைகொ டுத்து நிற்கிறது.

கடகம் என்பது பல அளவுகளில் அமைகிறது.இதில் நாரின் பயன்பாடு மிகுந்த கடகமும் இருக்கிறது. பனை ஓலையினால் பின்னப்பட்டாலும், பனை நாரின் முக்கிய இடத்தால்த்தான் இந்தவகைக் கடகம் சிறப்பானதாய் வந்தமைகிறது. பனை ஓலையினால் இளைக்கப்படுவதையும் கடகம் என்றுதான் பொது வாகச் சொல்லுவது வழக்கம். ஆனால் அதில் பனை நார் வந்து சேரும் பொழுது அது நார்க்கடகம் என் னும் பெயரால் அழைக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதேயாகும்,

பதினெட்டு அங்குல வாய் விட்டமும் ஒன்பது அங்குல உயரமும் கொண்டதாய் நான்கு மூலைகளை உள்ளடக்கியதாய் பனை ஓலையினால்த்தான் இக்கடகம் முதலில் வந்து அமையும். இப்படி பனை ஓலை யினால் இழைக்கப்படும் கடகம் வலிமை குறைந்ததாகவே காணப்படும். இவ்வாறு இழைக்கப்பட்ட கடகத்தின் வெளிப்பகுதியில் நார் வந்து துணையாக அதுவும் நல்ல துணையாக வந்து கைகொடுத்து நிற்கும். ஏற்கனவே இழைக்கப்பட்ட பனை ஓலைக் கடகத்தின் வெளிப்பகுதி பனை நார் கொண்டு மீண்டும் இரண்டாம் முறை இழைக்கப்படுகிறது. பனை நார் கொண்டு மீண்டும் இழைக்கப்படுவதற்கு முக்கியமான காரணம் என்ன வென்றால் கடகத்துக்கு வலிமையினை ஊட்டுவதேயாகும்.

அப்படி நாரினால் உறிதியாக்கப்பட்டு வரும் பொழுதுதான் அது நார்க்கடகம் என்னும் பெயரினைப் பெற்று நிற்கிறது, இந்த நார்க்கடகம்தான் கட்டுமானப் பணிகளின் பொழுது மிகவும் பயனை நல்கும் விதத்தில் உதவி நிற்கிறது எனலாம். கல்லை, மண்ணை சுமந்து செலுவதற்குக் கைகொடுக்கும் கடகமாய் இந்த நார்க்கடங்களே வந்து நிற்கின்றன. சாதாரண கடகங்களை விட இக்கடங்கள் நீண்ட நாட்களுக்குப் பயன்கொடுத்து நிற்கும் என்பதை மனமிருத்துவது முக்கியமாகும். சாதாரண கடகங்கள் விலையை விட இந்த வகையான கடகங் கங்கள் சற்று கூடிய விலை யில்தான்

(5 ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர்
Kalaikkathir

# கற்பகதரு என்னும் அற்புதம்.....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

விற்கப்படுகின்றன.செயற்கையான பொருட்கள் வந்தாலும் இந்தவகைநார்க்கடகங்கள்இன்றும்பயன்பாட்டில்இருக்கின்றன என்பதும் நோக்கத் தக்கதாகும். எங்களின் சொத்தான பனையின் கொடையான நாரையும் ஓலையினையும் விட்டுவிடுவது பொருத்தம் இல்லாத செயலன்றோ ! நார்க்கடகங்களைக் கைவிடுவதால் அத்தொழிலில் ஈடு படுகின்ற தொழிலாளர்களும் நலிவடைவார்கள் அல்லவா! அவர்களும் நம்மவர்கள் அல்லவா !

பனை நார் என்றதுமே பட்டங்களும் கண்முன்னே வந்து நிற்கின்றன.பட்டங்கள் விடுவதே பெரிய திரு விழாதான். பட்டத்தை விரும்பாதவர்கள் இருக்கவே மாட்டார்கள்.


**பட்டம் விடுவோம் பட்டம் விடும்வோம் பாலா ஓடிவா**
**பாடிப்பாடி பட்டம் விடுவோம் பாலா ஓடிவா**

என்னும் பாட்டை நினைத்துப்பாருங்கள்.நாங்கள் படித்த பாடப் புத்தகங்களிலேயே இந்தப் பாட்டு இடம் பெற்றிருந்ததை நினைவூட்டிப் பாருங்கள். பட்டம் என்றாலே சிறியவருக்கும் விருப்பம். பெரியவர்களு க்கும் விருப்பம்.காற்றுக் காலங்களில் பெரிய வெளிகளைத் தேடி ஓடி பட்டங்களை விட்டோம் என்பதை யும் எண்ணிப் பாருங்கள். கொக்கன், பிராந்தன், எட்டு மூலை, பாம்பன், என்று பட்டங்களை விடுவோம். இவற்றுடனெல்லாம் பனை நாரும் கூடவே நின்றிருந்தது என்பதுதான் முக்கியமாகும்.

பட்டங்களை அமைக்கும் பொழுது அதில் அழகினைச் சேர்த்திட வித்தியாசமாய் சிந்திந்து செயற் பட்டதையும் நினைத்துப் பார்த்திட வேண்டும்.படங்கள் பறந்து செல்லும் பொழுது தனித்துவமான ஒரு ஒலியினை எழுப்பி நிற்கும் வண்ணம் பட்டத்தை வடிவமைத்தார்கள். அப்படித்தனித்துவ மாய் வருகின்ற ஒலியினை விண் கூவுதல் என்று பெயரிட்டு அழைத்ததை மனமிருத்திப் பார்த்தால் அந்தக் காட்சி மனதிலே படமாய் ஓடி நிற்கும்.இப்படி அமையும் விண் கூவும் பட்டம் என்பது தனித்துவமானதாகும். பனை மட்டையிலிருந்து உரித்து எடுக்கப்படும் நாரினை நெருப்புச் சூட்டில் அளவாகக் காட்டி விட்டு அந்த பனை நாரினை பட்டத்தின் பின்புறத்தில் இணைத்து விடுவார்கள். பட்டம் வானில் பறக்கும்போது -பட்ட த்துடன் இணைக்கப்பட்ட பனை நாருடன் காற்று உராயும் பொழுது நல்லவொரு ஒலி அங்கே ஏற்படும். இதைத்தான் விண் கூவுதல் என்கிறோம். விண் கூவும் பட்டம் -வானில் பறக்கும் பொழுது , அப்பகு தியில் இருப்பவர்களை , அப்பகுதி யால் போய் வருபவர்களை கட்டாயம் தலை நிமிர்ந்து பார்த்திடவே வைத்திடும்.மண்ணிலிருந்து விண்வரை பனை நார் வியாபித்திருக்கிறது என்றால் நாமனைவரும் பனை யையும் அதன் பயனான பனை நாரையும் வியந்து பார்த்திடாமல் இருக்கதான் முடியுமா !

நடக்கும் பொழுது பாதையில் இருக்கின்ற கல்லோ, முள்ளோ , எமது காற்பாதங்களைப் பாதிக்காமல் இருப்பதற்கு , பாதுகாப்பின் பொருட்டாகவே காலணிகள் கண்டு பிடிக்கப்பட்டது. தோலினால் ஆகிய கால ணிகள் கி. மு. 8,000ம் ஆண்டு முதலே பயன்பாட்டில் இருந்து வந்திருக்கிறது என்பது தொல்லியல்கண்டுபிடிப்பின்வாயிலாகஅறியக் கூடியதாக இருக்கிறது.காலின் பாதுகாப்பினைக் கருத்திற் கொண்டு தமிழ் நாட்டில் அந்த நாளில் - குமரி மாவட்டத்தில் இருந்தவர்கள் , பனை ஓலையினைப் பயன்படுத்தி காலணி களை உருவாக்கி அணிந்தார்கள் என்றும் அறியக்கிடக்கிறது.இத்தகைய காலணிகள் பெரியவர்களுக்கும், சிறியவர்களுக்கும் பொருந்திவரும் வகையில் செய்யப்பட்டன







என்பது குறிப்பிடப்படவேண்டிய விடயம் எனலாம்.பனை நார் பற்றிச் சொல்ல வந்து விட்டு - பனை ஓலைக்குள் போய்விட்டதாக எண்ணிவிடாதீர் கள். பனை ஓலையினால் உருவாக்கப்பட்ட காலணிகளைக் கட்டிக் கொள்ளுவதற்குக் கைகொடுத்தது எது தெரியுமா அதுதான் அகணி நார் .

மண் சுமப்பவர்கள், சந்தைக்குப் பொருட்களைத் தலைச் சுமடாக எடுத்து வருகின்றவர்ககள் அப்பகுதியில் பனஞ் செருப்பினை அணிந்து பயன் பெற்றிருக்கிறார்கள். பயன்படுத்தும் பொழுது பிய்ந்து விட்டால் புதிய செருப்பினைப் பெற்றுப்பயன்படுத்தும்வாய்ப்பும்நிறையவே இருந்திருக்கிறது. மூலப் பொருளைத் தேடி ஓட வேண்டிய அவசியமே இல்லை அல்லவா ? அருகில்தானே மூலப்பொருள் குவிந்துபோய் கிடக்கிறது. இந்தவகையான செருப்பினை அணிந்து கொண்டு இரு சக்கர வாகனத்திலும் பயணிக்கலாம் என்னும் செய்தியும் மனதுக்கு மகிழ்ச்சியாய் இருக்கிறதல்லவா !

காலைக் கடிக்கும் செருப்புகள் பற்றி யாவரும் அறிவோம். ஆனால் காலை ஒருபோதுமே கடிக்காத செருப்புத்தான் இந்தப் பனஞ்செருப்பு. அகணி நாரால கட்டப்படும் பொழுது கால்களுக்கும் நல்ல இதமாயும் பதமாயும், இச்செருப்பு அமை கிறது.செயற்கை முறையிலான பிளாஸ்டிக் செருப்புகளுக்குப் பதிலாக இச்செருப்புகளை அணிவதை அனைவரும் எண்ணிப் பார்க்கவேண்டும்.நவநாகரிகத்துக்கு ஒத்துவரமாட்டாமல் இருந்தாலும் - இச்செருப்பை அணிவதால் எவ்வித பாதிப்பும் கால் பாதங்களுக்கு வந்துவிடாது என்பதை மனமெண்ணிப் பார்த்திடல் வேண்டும். பனை ஓலைச் செருப்பு இன்றும் பயன் பாட்டில் இருக்கிறதா என்று கேட்க நினைக்கிறீர்களா ? குமரி மாவட்டத்தைச் சேர்ந்த அருணாசலம் என்பவர் பனஞ் செருப்பினைச் செய்து விற்பனைக்கு விடுகிறார்.தமிழ் நாட்டில் திருநெல்வேலி மாவட்ட த்தில் ஏரல் என்னும் பகுதியில் இருக்கின்ற மக்கள் சிலர் பனஞ் செருப்பினைப் பயன்பாட்டில் வை திருக்கிறார்கள்.

நாட்டார் தெய்வ வழிபாடுகளில் இந்த மக்கள் ஆர்வ முடையவர்கள். அந்தவழிபாட்டினைப்பக்திபூர்வமாக அவர்கள் செய்து வருகிறார்கள். அந்தத் தெய்வங்களுக்காக அவர்கள் நோன்பு இருக்கும் காலங்களில் பனஞ் செருப்புகளையே பயன்படுத்துகிறார்கள் என்பது குறிப்படப்படவேண்டிய விடய மென லாம்.பனஞ் செருப்பு என்பது எங்கள் கலாசாரத்தி ன் அடையாளம் அல்லவா ! அந்தப் பனஞ் செருப்பி னைப் பிணைத்திருக்கும் பனை நாரும் எங்களின் பண்பாடுதான் அல்லவா !

வளரும்


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஈராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு
கற்பகவனம்
செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1100/=
Kothu Roty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cococola M - 70/=
Pepsi M - 70/=
Swebpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# குடிநீர் முகாமைத்துவத்துக்காக தனி செயலகம் ஏற்பாடுகள் குறித்து ஐ.நாவிடம் ஜீவன் விளக்கம்



நிலைபேண்தகு அபிவிருத்தி திட்டத்தில் உள்ள 'பாதுகாப்பான மற்றும் தூய்மையான குடிநீர்' என்ற இலக்கை 2030 ஆம் ஆண்டுக்குள்அடைவதேதமது எதிர்பார்ப்பாகஇருப்பதாகவும், இதற்கான உட்கட்டமைப்பு, நிதி உள்ளிட்ட உதவிகளை ஐ.நாவின் குடிநீருக்கான ஸ்தாபனம் வழங்க வேண்டும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வ-ழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், ஒன்றிணைக்கப்பட்ட குடிநீர் முகாமைத்துவ கொள்கையின் பிரகாரம் குடிநீர் வழங்கலுக்காக பிரதம அமைச்சின் கீழ் தனியானதொரு செயலகம் நிறுவப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

சுவிஸ் தலைநகர் ஜெனி-வாவுக்கு பயணம்மேற்கொண்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான், ஐ.நாவின் குடிநீருக்கான ஸ்தாபனத்தின் உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினார்.

ஜெனிவாவில் உள்ள உலக வானிலை அமைப்பின் தலைமையகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் ஐ.நாவின் குடிநீருக்கான ஸ்தாபனத்தின் உப தலைவர் யோகானஸ் கல்மன், உலகளாவியகண்காணிப்பு பணிப்பாளர் வில் ரைட்எட், தலைமை நிபுணத்துவ அதிகாரி கலாஸ் மொல்டிவ்ஸ் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், பெருந்தோட்ட மனிதவள நிறுவனத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி, அமைச்சின் ஆலோசகர் ஹரித்த விக்கிரமசிங்க ஆகியோர் அமைச்சருடன் சந்திப்பில் பங்கேற்றனர்.

குடிநீர் வழங்குதலில் ஏற்படவுள்ள கொள்கை ரீதியிலான மாற்றம், ஒன்றிணைக்கப்பட்ட குடிநீர் முகாமைத்துவகொள்கைஎன்பன குறித்து ஐ.நா. அதிகாரிகளுக்கு அமைச்சர் இதன்போது விளக்கம் அளித்தார். காலநிலை மாற்றம் தொடர்பான செயல் திட்டம் பற்றியும் விளக்கம் அளித்தார்.

குறிப்பாக ஒன்றிணைக்கப்பட்ட குடிநீர் முகாமைத்துவ கொள்கை ஊடாக, குடிநீர் தொடர்பான அனைத்து ஸ்தாபனங்கள் மற்றும் திணைக்களங்களை ஒன்றிணைத்துபிரதமஅமைச்சரின்கீழ் தனியான செயலகமாக நீர்வ-ழங்கல் கொண்டுவரப்படும் எனவும், அதற்கான ஏற்பாடுகள், அந்த செயலகம் எவ்வாறு செயற்படும் என்பது சம்பந்தமாகவும் அமைச்சர் ஜீவன் தொண்டமான், அதிகாரிகளுக்கு எடுத்துரைத்தார்.

அதேவேளை,நிலைபேண்தகு அபிவிருத்தி திட்டத்துக்குள் பாதுகாப்பு மற்றும் தூய்மையான குடிநீர் என்பதும் பிரதான விடயமாக உள்ளது. 2030 ஆம் ஆண்டளவில் இந்த இலக்கை அடைவதே எமது எதிர்பார்ப்பாகஉள்ளது. இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட எதிர்பாராத சூழ்நிலைகளால் குறிப்பிட்ட காலத்துக்குள்இலக்கைஅடைவது சவாலாக உள்ளது. எனவே, உரிய காலப்பகுதிக்குள் இலக்கை அடைவதற்கானஉட்கட்டமைப்பு, நிதி உள்ளிட்ட வசதிகளை ஐ.நாவின் குடிநீருக்கான திட்டத்திடம் இருந்து எதிர்பார்க்கின்றோம். - எனவும் அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார். (05)

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை பெயரில் சேகரித்த நிதி முழுமையாக தெல்லிப்பழைக்கே

## லயன்ஸ் கழக ஆளுநர் அவையில் இறுதி முடிவு




தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு என சர்வதேச லயன்ஸ் கழகத்தால் வழங்கப்பட்ட ஒரு கோடியே 40 லட்சம் ரூபாவும் வைத்தியசாலையின் பெயரைப் பயன்படுத்தி உள்ளூரில் சேகரிக்கப்பட்ட 52 லட்சம் ரூபாவும் முழுமையாக வட்டியுடன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கே வழங்குவது என இறுதி செய்யப்பட்டது.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 பி1 இனது 2 ஆவது ஆளுநர்சபைக் கூட்டம் மாவட்ட ஆளுநர் லயன் பிளஸிடஸ் எம்பீற்றர் தலைமையில் கடந்த 14 ஆம் திகதி கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலேயே மேற்படி முடிவு ஏகமனதாக எடுக்கப்பட்டதாக லயன்ஸ் கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் மேலும் தெரிய-வருவதாவது -

சர்;வதேச லயன்ஸ் கழகங்களால் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை புற்றுநோயாளர்களின் விடுதி கட்டில்கள் ஒவ்வொன்றுக்கும் ஒட்சிசன்பொருத்துவதற்கென, சர்வதேச லயன்ஸ் கழகத்தால் வழங்கப்பட்ட ஒரு கோடியே 40 லட்சம் ரூபாவும் உள்ளூர் கொடையாளர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட 51 லட்சம் ரூபாவுமாக மொத்தம் ஒரு கோடியே 91 லட்சம் ரூபாவில் சேவைத்திட்டம் முடிவுறுத்தப்பட்டு மீதமாக உள்ள 42 லட்சம் ரூபாவை கடந்த ஆண்டு ஆளுநர் வைத்தியர் அநோமா விஜயசிங்கவால் முறைகேடாக சிலாபம் வைத்தியசாலைக்கு மாற்ற எடுக்கப்பட்ட முயற்சி நேர்மைத்திறன் கொண்ட சில லயன்ஸ்களால் தடுக்கப்பட்டது. இதன் இறுதிமுடிவு பல ஆளுநர் சபைக்கூட்டங்களில் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று முடிவே-துமின்றி கூட்டம் நிறைவுற்றாலும் கடந்த 14 ஆம் திகதி கோண்டாவில் இராஜேஸ்வரிமண்டபத்தில்நடைபெற்ற ஆளுநர் அவையில் இறுதியான முடிவு எடுக்கப்பட்டு, அந்த நிதி முழுமையாக வட்டியுடன்தெல்லிப்பழைஆதாரவைத்தியசாலைக்கேவழங்குவது என்று இறுதி செய்யப்பட்டது. இந்த முறைகேடானநிதி மாற்றத்துக்கு எதிராக நேர்மையாகக் குரல்கொடுத்த 4 உறுப்பினர்களுக்கு எதிராகலயன்ஸ்கழகத்தால்ஒழுக்காற்று நடவடிக்;கைமேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (05)



காலைக்கதிர்
Kalaikkathir

## ஆடைத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணத்தை வழங்கக் கோரி நோர்வூட் ஆடை தொழிற்சாலை ஒன்றின் தொழிலாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

3 மாத கால சம்பள நிலுவைப் பணத்தையும் ஒரு வருடத்திற்கான போனஸ் பணத்தையும் வழங்குமாறும் அவர்கள் கோரினர்.

நோர்வூட் பேஷன் நிறுவனத்தின் கீழ் இயங்கும் நியூவெளி கம பகுதியிலுள்ள இந்த ஆடை தொழிற் சாலை முன்பாக முன்னெடுக்கப்பட்ட குறித்த ஆர்ப்பாட்டத்தில் 300ற்கும் மேற்பட்ட ஊழியர்கள் கலந்துகொண்டனர். தாம் வேலை செய்ததற்கான 3 மாதகால சம்பளத்தையும் ஒருவருடத்திற்கான போனஸ் பணத்தினையும் தங்களுக்கு வழங்காது தொழிற்சாலையையும் மூடி விட்டு சென்று விட்டார்கள் என்றும் தொழிலாளர்கள் குற்றஞ்சுமத்தினர்.

தமது ஊழியர் சேமலாப பத்திரத்தை வழங்குவதற்குக்கூட அந்த தொழிற்சாலை நிர்வாகம் மறுப்பதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டினர். குறித்த அட்டைகள் காணாமல் போய் விட்டதாக தொழிற்சாலை நிர்வாகம் பொறுப்ன்றிக் கூறுகின்றனர் நோர்வூட் நியூவெளிகமவில் உள்ள இந்த ஆடை தொழிற்சாலை 3 மாத காலமாக மூடப்பட்டுகிடக்கின்றது. இந்தப்பிரச்சினையில் அதிகாரிகள் தலையிட்டு தமது சம்பளத்தையும் போனஸ் பணத்தையும் பெற்றுத்தரவேண்டும் என்று தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

## ரணிலின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிக்கப்பட்டுள்ளது. சாதாரண மின்சார பாவனையாளர்கள் இதனால் பாதிக்கப்படுகின்றனர். கிராமப்புறங்களில் வாழும் மக்கள் இதனால் வெகுவாக பாதிக்கப்படுகின்றனர்.

இந்த ஆட்சியாளர்கள் மின்சார கட்டணத்தை குறைக்கும் பொழுது 5 சதவீதம் 10 சதவீதம் என குறைத்து விட்டு அதிகரிக்கும் பொழுது 20 சதவீதம் மற்றும் 25 சதவீதம் என அதிகரிக்கின்றது.

அதேபோல் நீர் கட்டணமும் அதிகரிக்கப்பட்டது. இந்த இரண்டு கட்டணங்களும் அதிகரித்தால் பொருட்களின் விலையும் அதிகரிக்கும். இந்த ஆட்சியால் மக்களுக்கு எந்தவித பலனும் இல்லை, இந்த ஆட்சி மக்களை மீண்டும் மீண்டும் பெரும் குழிக்குள் தள்ளுகின்றது. மக்கள் வீதியில் இறங்கி போராட வேண்டிய நிலை தற்பொழுது ஏற்பட்டுள்ளது. -என்றார்.

## சுகாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் மீதும் குற்றச்சாட்டுக்கள் உள்ளன. சகல தருணங்களிலும் நாட்டில் தரமற்ற மருந்துகள் இருந்தன. அதுபோன்று தான் சுகாதாரத்துறையும் என்றார்.

# நாடாளுமன்றத்தின் கௌரவத்தை பாதுகாக்க சபாநாயகர் பொறுப்புடன் செயற்படல்வேண்டும்

### சம்பிக்க அறிவுரை



நாடாளுமன்றத்துக்கு தீ வைக்க வேண்டும், 225 உறுப்பினர்களை விரட்டியடிக்க வேண்டும் என இளைஞர்கள் குறிப்பிடுவதை நியாயப்படுத்தும் வகையில் ஒருசில நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்படுகிறார்கள்.

நாடாளுமன்றத்தின் கௌரவத்தை பாதுகாக்க சபாநாயகர் பொறுப்புடன், கடுமையாக செயற்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் குடியரசின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

மஹரகம பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

நாடாளுமன்ற உறுப்பினர் டயனா கமகே தொடர்பில் கருத்து தெரிவிக்க விரும்பவில்லை. 225 நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாட்டை நாட்டு மக்கள் உன்னிப்பாக அவதானித்துள்ளார்கள். தேர்தல் ஒன்று இடம்பெற்றால் தக்க பதிலடி கொடுப்பார்கள். நாட்டு மக்களும் அரசியல் ரீதியில் இனிவரும் காலங்களில் மாறுப்பட்ட தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

நாடாளுமன்றத்துக்கு தீ வைக்க வேண்டும், 225 உறுப்பினர்களையும் விரட்டியடிக்க வேண்டும் என்ற எதிர்ப்பு கடந்த ஆண்டு தோற்றம் பெற்றது. இளைஞர்கள் மத்தியில் இந்த நிலைப்பாடு காணப்படுகிறது. நாடாளுமன்றம் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் தொடர்பில் மக்கள் மத்தியில் உள்ள தவறான நிலைப்பாட்டை நியாயப்படுத்தும் வகையில் ஒருசில நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெறுக்கத்தக்க வகையில் செயற்படுகிறார்கள்.

முன்னாள் சபாநாயகர் அனுர பண்டாரநாயக்க நாடாளுமன்றத்தின் கௌரவத்தை பாதுகாக்க ஒருசில நேரங்களில் கடுமையான தீர்மானங்களை எடுத்தார். ஆளும் மற்றும் எதிர்தரப்பு என்று பாரபட்சமில்லாமல் நடுநிலையாக செயற்பட்டார். ஆகவே தற்போதைய நாடாளுமன்றம் குறித்து மக்கள் மத்தியில் நல்லதொரு நிலைப்பாடு கிடையாது, ஆகவே சபாநாயகர் கடுமையாகவும், பொறுப்புடனும் செயற்பட வேண்டும். - என்றார். (05)




JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# தமிழர்களின் அழிவுகளும் அனுபவங்களும் உலகுக்கே பாடமாக அமைந்துள்ளதாம்

## டக்ளஸ் கூறுகிறார்



எமது உரிமைப் போராட்ட அனுபவங்களும் அழிவு யுத்த முடிவுகளும் சகல மக்களுக்கும் பாடமாக அமைந்து விட்டது. சமாதானபேச்சுக்கான கதவுகளை இறுக மூடிவிட்டு ஆயுதங்களால் எதையும் அடைந்துவிட முடியும் என்ற அதீத நம்பிக்கையின் விளைவுகளே அந்தப் படிப்பினைகள் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன - இஸ்ரேல் விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவிவாதத்தில்கலந்துகொண்டு உரையாற்றும் போதே கடற்றொழில்அமைச்சர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா -

எமது முன்னோர்கள் காத்து-வந்த மரத்தின் விதைகளை நான் மறவாது காத்திருக்கிறேன். இந்த விதைகளையேஎனதுதாயகத்தில் மீண்டும் விதைப்பேன். எழுபது ஆண்டுகள் ஆக்கிரமிப்பிற்கும் அவலங்களுக்கும் மத்தியில் பாலஸ்தீன மண்ணில் இருந்து எழும் நம்பிக்கையின் குரல் இது.

இஸ்ரேல் படையினருக்கும் கமாஸ் இயக்கத்துக்கும் இடையிலான மோதல் குறித்தும் மக்களின் அவலங்கள் குறித்தும் எனது கருத்துக்களை வழங்கியமைக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

1914ஆம் ஆண்டு வரையில் ஒட்டோமோன் பேரரசின் கீழிருந்த இப் பகுதி, முதலாம் உலகப் போரில் பேரரசு வீழ்ச்சி காண, பிரித்தானியாவின் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டு, 1948 ஆம் ஆண்டுவரை அதன் ஆட்சி நீடித்தது.

பிரித்தானியர் தமது ஆட்சிப்பகுதியைவிட்டுவெளியேறிய சமயத்தில், இப்பகுதியை இரண்டாகப் பிரித்து, பாலஸ்தீன அராபியர்களுக்கென ஒருநாடும், யூதர்களுக்கு ஒருநாடும் தோற்றுவிப்பதற்கும், ஜெரூஸலம் நகரத்தை சர்வதேச நகரமாக மாற்றவும் ஐக்கிய நாடுகள் சபை தனது ஆதரவைத் தெரிவித்திருந்தது.

இதனை யூதத் தலைவர்கள் ஏற்றுக் கொண்டனர். ஆனால், அரபிய தலைவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அன்றிலிருந்து இந்த யுத்தம்இன்றுவரையில்விட்டு,விட்டு தொடர்ந்து கொண்டெயிருக்கிறது. தற்போது நடந்து கொண்டிருக்கின்ற இந்த மோதலானது இரு தரப்பிலும் ஆயிரக் கணக்கான பொது மக்களைகாவுகொண்டிருக்கின்றது. பலரை அங்கவீனமாக்கியுள்ளது. பல வள அழிவுகளைத் தந்து கொண்டிருக்கிறது. நீடித்த காலமாக பாலஸ்தீனத்திற்கும் இஸ்ரேலுக்கும் இடையில் பல சுற்றுப் பேச்சுகள் இடம்பெற்றுள்ளன. ஆனால் இது-வரையில் சுமுகமான தீர்வு எதுவும் எட்டப்படவில்லை.

இருதரப்பினரும் சமாதானத்திற்கு வரவேண்டுமானால் சில விடயங்கள் குறித்து முக்கிய தீர்மானங்கள் எடுக்க வேண்டும். ஒன்று, பிறநாடுகளில் தஞ்சம் அடைந்துள்ள பாலஸ்தீனிய அகதிகளின் நிலை பற்றியது. இவர்களுக்கான வழி என்ன? என்பது தொடர்பில் இரு தரப்பினரும் இதுவரை எந்தவிதமான தீர்வுகளுக்கும் வரவில்லை. எனவே, இவ்விடயம் தொடர்பில் தீர்வு எட்டப்பட வேண்டியுள்ளது.

இரண்டாவது, மேற்கு கரையில் இஸ்ரேலினால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புக்கள்தொடர்பானவிடயம். சர்வதேச விதிகளின்படி இந்தக் குடியிருப்புக்கள் சட்டவிரோதமானவை என்று ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபை நிலைப்பாட்டினை கொண்டுள்ளது. இதனை இஸ்ரேல் மறுத்துள்ளது. எனவே, இந்தக் குடியிருப்புக்கள் அகற்றப்பட வேண்டுமா இல்லையா என்பது தொடர்பில்தீர்வுஎட்டப்படவேண்டும்.

மூன்றாவது, ஜெருசலேம்நகரை இரண்டு தரப்பினரும் பகிர்ந்து கொள்வதா இல்லையா என்பது குறித்து இரண்டு தரப்பினரும் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். நான்காவது, இஸ்ரேலைப் போன்று பாலஸ்தீனமும் தனியான சுதந்திர நாடாகக் கருதப்படுமா என்பது தொடர்பிலும் தீர்வு காண்பட வேண்டும். மேற்படி விடயங்கள் தொடர்பில் பேச்சுகள் தொடர்பில் நிரந்தர தீர்வு எட்டப்பட்டு விட்டால், அங்கு நிரந்தர சமாதானத்தை எட்டுவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகம் என்றே கருதப்படுகின்றது.

நானும் எமது மக்களுக்கான நீதியான உரிமைப் போராட்டத்தை வழிநடத்தியவன். அந்தப் போராட்டத்தில் நான் தமிழ் மக்களை மாத்திரம் நேசித்தவன் அல்லன். ஒடுக்கப்பட்ட மக்கள் என்ற அடிப்படையில் மலையக மற்றும் இஸ்லாமிய மக்களை மாத்திரமன்றி சிங்கள மக்களையும் ஆழமாக நேசித்தவன். அதுபோல உலக அரங்கில் எங்கெல்லாம் விடியலுக்கான போராட்டங்கள் நடந்தனவோ, அங்கெல்லாம் உள்ள மக்களையும் நேசித்தவன்.

பாலஸ்தீனம் 1978 இல் எமக்கு ஆயுதப் பயிற்சி தந்தது. 1984ஆம்ஆண்டிலும்தோழர்களை அங்கு பயிற்சிக்கு அழைத்துச் சென்றிருந்தேன். அப்போது பாலஸ்தீன மக்களுடன் நான் பழகியிருக்கின்றேன். அவர்களின் ஆழமான உணர்வுகளையும் விரும்பங்களையும் உணர்ந்திருக்கின்றேன். எமது பயிற் சியின் போது அவர்களின் போராட்டங்களிலும் நான் களத்தில் நின்று பங்குபற்றியுள்ளேன். ஆர்ப்பாட்டங்களிலும் கலந்து கொண்டிருக்கின்றேன்.

அங்கிருந்த பல்வேறு விடுதலை இயக்கங்களுடனும் பன்னாட்டு விடுதலை இயக்கங்களுடனும் பழகி இருக்கின்றேன். அவர்களது வழிமுறைகளையும் செயற்பாடுகளையும் அப்போது ஆராய்ந்து பார்த்திருக்கின்றேன். பாலஸ்தீன் போராட்ட முறைகளில் மாற்றம் ஒன்று தேவை என்பதை உணர்ந்து, அவர்களுடனும் பேசி இருக்கின்றேன்.

அதேபோன்றுஎமதுவிடுதலைப் போராட்ட முறைகளிலும் மாற்றம் தேவையென விரும்பியும் இருக்கின்றேன். பாலஸ்தீன போராட்ட அனுபங்களில் இருந்து நாம் பாடங்களை கற்க வேண்டும் என நான் அப்போதே கருதி இருக்கின்றேன். ஆனால் இன்று, எமது உரிமைப் போராட்ட அனுபவங்களும் அழிவு யுத்த முடிவுகளும் சகல மக்களுக்கும் பாடமாக அமைந்து விட்டது. சமாதான பேச்சுக்கான கதவுகளை இறுக மூடிவிட்டு ஆயுதங்களால் எதையும் அடைந்துவிட முடியும் என்றஅதீதநம்பிக்கையின்விளைவுகளே அந்தப் படிப்பினைகள்.

போராட்டம் என்பது நிறுத்த வேண்டிய இடத்தில் நிறுத்துவது, பேசவேண்டிய இடத்தில் பேசுவது, அடையவேண்டிய இலக்கை சாத்தியமான வழிகளில் அடைவதுமேயாகும். சமாதானத்திற்கான பேச்சு என்ற போர்வையில் அழிவை நோக்கியவன்முறைரீதியாகதம்மை பலப்படுத்தும் கபட நோக்கத்தினையேநாம்கண்டிருக்கின்றோம்.

ஒருகையில் ஒலிவ் மரக் கிளை, மறுகையில் ஆயுதம் இரண்டும் இருக்கின்றது. எதுவேண்டும் என்பதை உலகம் தீர்மானிக்கட்டும் என்று யசீர் அரபாத் விடுத்த பகிரங்க அறிவிப்பை நான் அன்று ஏற்றுக் கொண்டிருக்கின்றேன்.

சந்திரிக்காஅம்மையார் தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கான ஓர் அற்புதமான தீர்வை முன்வைத்திருந்தார். அப்போது அங்கிருந்து ஒரு கவிஞனின் குரல், 'தந்ததை வாங்கிதலைகுனிந்துகொள்வதற்கு எங்களின் தலைவன் அரபாத் அல்லன்' என்று உசுப்பேத்துகின்ற கவிதை வரிகளை வெளிப்படுத்தியிருந்தார். அதன்பின்னரான விளைவுகள்என்னவென்பதுஉங்கள் எல்லோருக்கும் தெரியும். இன்று மாறிவந்திருக்கின்ற உலகத்தின் போக்கை உணர்ந்து பாலஸ்தீன மக்களின் பிரச்சினைகள் பேசித் தீர்க்கப்பட வேண்டும். அங்கு அமைதி நிலவ வேண்டும். மக்களின் நிலம் மக்களுக்கே சொந்தம் என்ற நிலைமை பாலஸ்தீனத்தில் மாத்திரமல்ல உலகெங்கும் நிலவ வேண்டும்.

அழிவு யுத்த காலத்தில் எமது மக்கள் உணவின்றி, நீரின்றி, மின்சாரமின்றி, போக்குவரத்தின்றி,கல்வியின்றிபலஅவலங்களை சுமந்து நின்ற வேளையில், அதன் வலிகளைநேரில்கண்டுஅதற்குகரம் நீட்டி,மக்களின்துயர்துடைத்தவர்கள் நாங்கள். இன்றுகாசாவிலும்இதுவே நடத்திருக்கின்றது. அங்கு சர்வதேச தொண்டு நிறுவனங்கள் மனிதாபிமான உதவிகளை விரைந்துசெய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றேன்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்துடன் எமது போராட்ட வழிமு-றைகளை மாற்றிக் கொண்டவர்கள். எமது மக்களின் பயணத்தை எங்கிருந்து தொடங்குவது என்ற தீர்மானத்தை எடுத்திருந்தோம். 13 ஆவது திருத்;தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, அங்கிருந்து தொடங்குவது என்று வலியுத்தியிருந்தோம்.

மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி இலக்கை முன்வைத்து, தேசிய நீரோட்டத்தில் கலந்து கொள்வது, நாடாளுமன்ற ஜனநாயகத்தின் ஊடாகவும், தேசிய நல்லிணக்கத்தின் ஊடாகவும் எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வது என்ற மூன்று அம்ச நிலைப்பாட்டினை அடிப்படைய-ாகக் கொண்டு, எமது அரசியல் பயணத்தை நெறிப்படுத்திக் கொண்டோம்.

அழிவு யுத்த காலத்தில் நாம் மனிதாபிமான பணிகளை மேற்கொண்டதையும் எமது அரசியல் நிலைப்பாட்டையும் எள்ளிநகைய-ாடிய இதர தமிழ் இயக்க கட்சிகள், இன்று நீண்ட காலம் கடந்து எமது நிலைப்பாட்டிற்கேவந்திருக்கின்றன. இதனை நான் வரவேற்கிறேன். ஆனால், இதில் இந்த தமிழ்க் கட்சிகளது எண்ணங்களும், சிந்தனைகளும் உண்மைத் தன்மையாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை ஏற்று, அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு முன்வாருங்கள். மாறாக, நாளாந்தம் வாராந்தம் மாதாந்தம் என்று புதுப்புதுப் பிரச்சினைகளை உருவாக்கி அவற்றை கொதிநிலை பிரச்சினை ஆக்காதீர்கள். எந்தப் பிரச்சினைக்கும் கூச்சல் இடுவது தேர்தல் அரசியலேயன்றி தீர்விற்கான வழியல்ல.

அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணும்போது, ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை எமக்குண்டு பிரச்சினைகளை தீராத பிரச்சினைகளாக்கி அதனையே தொடர்வதை விட்டு, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இதர தமிழ்க்கட்சிகள் முன்வர வேண்டும் என்பதே எனது நீண்டகால எதிர்பார்ப்பாக உள்ளது.

இன்றைய நிலையில் எமது ஜனாதிபதி மேன்மைதங்கிய ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துக்களும், செயற்பாடுகளும் எமது மக்களது பிரச்சினைகள் தொடர்பில் வெகு சாதகமாகவே முன்னிறுத்தப்பட்டு வருகின்றன. எதிர்க்கட்சிகளும் கிட்டத்தட்ட அந்த நிலைப்பாட்டினை ஏற்றுவருகின்றன. இந்தவாய்ப்பினை நாம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே எனது அபிலாசையாகும். - எனவும் தெரிவித்துள்ளார். (05)

# வாழ்க்கைச் செலவு உயர்வால் மக்கள் மோசமாக பாதிப்படைவு

## ஜனாதிபதியுடன் பேசவுள்ளார் மஹிந்த



நாட்டு மக்கள் பொருளாதார பாதிப்பு, வாழ்க்கைச் செலவு உயர்வு ஆகிய நெருக்கடிகளால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்நிலைமைமாற்றியமைக்கப்பட வேண்டும். ஜனாதிபதியுடன் இந்த வாரம் இடம்பெறவுள்ள பேச்சின் போது விசேட கவனம் செலுத்துவோம் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இரத்தினபுரி - பெல்மடுல்ல பகுதியில் இடம்பெற்ற மத வழிபாட்டின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

பொருளாதார பாதிப்பு மற்றும், வாழ்க்கை செலவு அதிகரிப்பால் ஒட்டுமொத்த மக்களும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும். 2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் மக்களுக்கு பயனுடையதாக அமைய வேண்டும்.

மக்கள் எதிர்கொண்டுள்ள இந்த அவல நிலையைமாற்றியமைக்கவேண்டும். ஜனாதிபதியுடன் எதிர்வரும் வாரம் இடம்பெறவுள்ள பேச்சின் போது இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடவுள்ளோம்.

பொதுஜனபெரமுனவின்முக்கியஅரசியல் தீர்மானங்கள்அடுத்தமாதம்வெளியிடப்படும். தேர்தலுக்கு நாங்கள் தயாராக உள்ளோம். ஜனாதிபதிவேட்பாளர்விவகாரத்தில்கட்சிக்குள் எவ்வித முரண்பாடும் கிடையாது. நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளும் வேட்பாளரை உரிய நேரத்தில் களமிறக்குவோம். - என்றார். (05)

# மின்சார சபை நட்டத்தில் இயங்குவதற்கு முறையற்ற முகாமைத்துவமே காரணம்

## கடுமையாகச் சாடுகிறார் இராதாகிருஷ்ணன் எம்.பி.



மின்சார கட்டண அதிகரிப்பு நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் கொண்ட மக்களுக்கு மேலும் பாரிய சுமையாக அமைந்துள்ளதாகவும் முறையற்ற முகாமைத்துவமே மின் சார சபை நட்டத்துடன் இயங்குவதற்கு காரணம் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மின்சார கட்டண அதிகரிப்பு உள்ளிட்ட விடயங்கள் குறித்து வின விய போது இவ்வாறு பதில் அளித்த அவர் மேலும் தெரிவிக்கையில் -

மின்சார கட்டணம் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளமையானது வருமா னம் குறைவாக உள்ள பெருந்தோட்ட மக்களை கடுமையாக பாதித்துள்ளதோடு நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் கொண்ட மக்களுக்கு கடும் சுமையை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே தம்மிடம் இருந்த தங்க ஆபரணங்கள் போன்றவற்றை விற்றே இம்மக்கள் மின்சார கட்டணம் போன்றவற்றை செலுத்தி உள்ளனர். இந்த சூழலிலும் கட்டணங்கள் மேலும் அதிகரிக்குமாக இருந்தால் மக்கள் எவ்வாறு வாழ முடியும்.

மின்சார சபை நட்டத்துடன் இயங்குவதே கட்டண அதிகரிப்பிற்கு காரணம் என சொல்லப்படுகிறது. முறையற்ற முகாமைத்துவமே மின்சார சபை நட்டத்துடன் இயங்குவதற்குக் காரணம் ஆகும். மின்சார சபையில் தேவைக்கு அதிகமான ஊழியர்கள் பணியாற்றுவதுடன் அவர்களின் கொடுப்பனவுகளுக்காக அதிகம் செலவிடப்படுகிறது. பாரிய கட்டத்துக்கு இவ்வாறான விடயங்களே காரணம் ஆகும்.

சர்வதேச நாணய நிதியத் தின் கோரிக்கைகளுக்கு அமையவே தற்போது நாட்டில் தீர்மானம் எடுக்கப்படுகின்றது.

இதனால் மக்களின் மீதே இறுதி சுமை சுமத்தப்படுகின்றது. நாட்டில் பல்வேறு ஊழல்கள் நடந்த போதும் அதற்கான நடவடிக்கைகள் இன்னமும் எடுக்கப்படவில்லை. துரதிஷ்டவசமாக ஊழலால் ஏற்பட்ட பிரதிபலனை இறுதியில் மக்களே எதிர் கொள்கின்றனர். என்றார். (05)

# விஜயின் லியோ பார்க்கச் சென்றோர் மீது மட்டக்களப்பில் வாள் வெட்டுத் தாக்குதல்



மட்டக்களப்பு - செங்கலடி திரையரங்கில் வெள்ளிக்கிழமை வாள் வெட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

விஜய் நடித்து வெளியான லியோ படம் பார்க்கச் சென்ற குழுக்களுக்கிடையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரு இளைஞர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு கைகலப்பாக மாறி அது வாள் வெட்டில் முடிந்துள்ளது.

இந்த சம்பவத்தில் 5 பேர் காயமடைந்துள்ளனர். இதில், 4 பேர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன், ஒருவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)

# பெருந்தோட்டங்களில் கைவிடப்பட்ட காணிகள் குறித்த விசேட அறிவிப்பு!

பெருந்தோட்டநிறுவனங்களால் கைவிடப்பட்டுள்ள காணிகளை அருகிலுள்ள குடியிருப்பாளர்களுக்கு பயிர் செய்வதற்கு வழங்கத் தேவையான சட்டத் திருத்தங்களை உடனடியாகத் தயாரிக்குமாறு நாடாளுமன்றத் துறைசார் மேற்பார்வைக் குழு உரியஅதிகாரிகளுக்குபணிப்புரை விடுத்துள்ளது.

அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை மற்றும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் 2021 ஆம்ஆண்டுக்கானஆண்டறிக்கை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட தலைமையில் இடம்பெற்ற குழுக் கூட்டத்திலேயே இந்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் கூட்டுத் தாபனங்கள், சபைகள், பணியகங்கள் மற்றும் அதிகாரசபைகள் உள்ளிட்ட நிறுவங்களின் இது வரை நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படாத 2012 மற்றும் 2022 ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளை நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு உரிய நிறுவனங்களுக்கு பரிந்துரை விடுத்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைக்கு அமைய ஆண்டறிக்கைகள் நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்பதால் உரிய நிறுவனங்களின் ஆண்டறிக்கைகளை விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, பெருந்தோட்ட நிறுவனங்களால் கைவிடப்பட்டுள்ள பல ஏக்கர்கள் காணிகளை அருகிலுள்ள குடியிருப்பாளர்களுக்கு வழங்கத் தேவையானசட்டத்திருத்தங்களை உடனடியாகத் தயாரிக்குமாறும் இதன்போது அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தை பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கான புதிய சட்டமூலமொன்றுதயாரிக்கப்பட்டு வருவதாக குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய தற்போதைய தொழில் போக்குகளுக்குப் பொருத்தமான வகையில் புதிய 4 பட்டப்படிப்புகள் மற்றும் பல்வேறு பாடநெறிகளை இதன்மூலம் அறிமுகப்படுத்த எதிர்பார்ப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நிறுவனத்தின் நிதி ஸ்திரத்தன்மை மற்றும் குறிக்கோளுக்கும்நோக்கத்துக்கும் பொருத்தமான வகையில் இந்த நடவடிக்கை இடம்பெற வேண்டும்எனகுழுவின்தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் காமினிவலேபொட ஆலோசனை வழங்கியுள்ளார்.(05)

# அரசாங்கங்கள் மாறும்போது தேசியத் திட்டங்களில் மாற்றம் வருவது நாட்டின் அபிவிருத்திக்கு இடையூறு

## பிரசன்ன ரணதுங்க சுட்டிக்காட்டு



தேசிய பௌதீகத் திட்டத்தை உடனடியாக ஒவ்வொருமாவட்டக்குழுவிற்கும்சமர்ப்பித்துஅனுமதி பெறுமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

நாடாளுமன்ற வளாகத்தில் தேசிய பௌதீக திட்டமிடல்திணைக்களஅதிகாரிகளுடன்அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களில், அதற்கான நிறுவனங்களை ஒருங்கிணைப்பதில் தாமதம் ஏற்படுவதால், அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதில் அடிக்கடி தாமதம் ஏற்படுகிறது. காலத்துக்குக் காலம் அரசாங்கங்கள் மாறும் போது தேசிய திட்டங்களில் ஏற்படும் மாற்றம் நாட்டின் அபிவிருத்திக்குத் தடையாக இருப்பதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், தேசிய பௌதீக திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் அபிவிருத்தித் திட்டங்கள் மிகவும் வினைத்திறனுள்ளதாகவும் மக்களின் தேவைகள் நிவர்த்தி செய்யப்படும் எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டார்.

தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தால் ’தேசிய பௌதீக திட்டம் - 2048’ தயாரிக்கப்பட்டுள்ளது. அது 2000ஃ49 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1946 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நகர மற்றும் கிராம திட்டமிடல் கட்டளையின் படி உள்ளது.

தேசிய பௌதீக திட்டம் அண்மையில் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவிடம்கையளிக்கப்பட்டது. அதற்கு ஜனாதிபதியின் ஒப்புதலும் கிடைத்தது. இந்த தேசிய பௌதீக திட்டத்திற்கு அனைத்து மாவட்ட குழுக்களின் அங்கீகாரத்தையும்பெற்றுக்கொள்ளுமாறும்ஜனாதிபதி அங்கு ஆலோசனை வழங்கினார்.

மேலும், இந்தத் திட்டம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட உள்ளது. பின்னர் அது வர்த்தமானியில் வெளியிடப்படும். தேசியபௌதீகதிட்டம்நாடாளுமன்றம் மற்றும் நாடாளுமன்றத்தின் அமைச்சர்கள் ஆலோசனைக்குழுவிடம்சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் இந்தக் கலந்துரையாடலில் தெரியவந்துள்ளது.

முதலாவதாக, 2007 இல் தேசிய பௌதீக திட்டம் தயாரிக்கப்பட்டது. பின்னர் அது 2019 இல் புதுப்பிக்கப்பட்டது. ’தேசிய பௌதீக திட்டம் - 2048’ பல்வேறு பகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அறிஞர்களின் கருத்துகள் மற்றும் பரிந்துரைகளை எடுத்துக் கொண்டு தயாரிக்கப்பட்டது. இதன் பிரதான நோக்கு ’ஒரு திட்டமிடப்பட்ட நிலையான வளமான நிலம்’ என்பதாகும். இந்த தேசிய பௌதீக திட்டம், அமைச்சின் செயலாளர்கள் குழுவிற்குள் சமர்ப்பிக்கப்பட்டு, அவர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளும் பெறப்பட்டுள்ளன.

நாட்டின் வளர்ச்சிக்கு தேசிய பௌதீக திட்டத்தின் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களின்படி தனித்துவமான பங்களிப்பை வழங்கும் நகர அபிவிருத்தி, நெடுஞ்சாலைகள், அதிவேக நெடுஞ்சாலைகள், புகையிரத, போக்குவரத்து போன்ற அனைத்து அபிவிருத்தி செயன்முறைகளையும் முன்னெடுப்பதன் மூலம் நாடுதற்போது எதிர்நோக்கும் பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளை பெருமளவில் தவிர்க்க முடியும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நாட்டின் சகல பிரதேசங்களையும் உள்ளடக்கும் வகையில் அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கும், பாதுகாக்கப்பட வேண்டிய பகுதிகளை இனங்கண்டு அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் இந்த தேசிய பௌதீக திட்டம் மிகவும் முக்கியமானது என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்த, தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் காமினி ஹேவகே உள்ளிட்டோர் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.(05)





# ஆதிவாசிகள் நயினாதீவில்

மஹியங்கனையில்வசித்துவரும் ஆதிவாசிகள் முதல் தடவையாக யாழ்ப்பாணத்திற்கு, சனிக்கிழமை விஜயம் மேற்கொண்ட நிலையில், ஞாயிற்றுக்கிழமை நயினாதீவு நாக விகாரைக்கு சென்றிருந்தனர்.

ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னிலஅத்தோ தலைமையிலான சுமார் 100 இற்கும் மேற்பட்ட ஆதிவாசிகள் குழுவினரே யாழிற்கு விஜயம் செய்துள்ளதுடன் இவர்கள் யாழின் முக்கிய இடங்களை பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# வவுனியா பிரதேச செயலகத்திற்கு முன்பாக மக்கள் ஆர்ப்பாட்டம்!



வேலங்குளம் கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட 08 கிராமங்களை சேர்ந்த மக்களால் வவுனியா பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப் பட்டது.

வவுனியா வேலங்குளம் கிராம சேவையாளரை அச்சுறுத்தியவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க கோரியும் தங்களிற்கான நிரந்தர கிராமசேவையாளரைநியமிக்ககோரி இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

பிரதேசசெயலகபிரதானவாயிலை மறித்து உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பொதுமக்களை வெளியேற விடாமல் தடுத்தும் அலுவலகத்தினுள் நுழைந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (05)

# ஒவ்வொரு வருடமும் யாழ்.கானம்’ நிகழ்வு!

## சந்தோஸ் நாராயணன் தெரிவிப்பு



ஒவ்வொரு வருடமும் ’யாழ் கானம்’ நிகழ்ச்சி இடம்பெற வேண்டும் என்பதற்காக அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக பிரபல இசையமைப்பாளர் சந்தோஸ் நாராயணன் தெரிவித்துள்ளார்.

தென்னிந்திய பிரபல இசையமைப்பாளரும் பாடகருமான சந்தோஸ் நாராயணனின் யாழ் கானம் எனும் மிகப் பிரம்மாண்ட இசை நிகழ்ச்சி யாழ் முற்றவெளி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இவ்விடயம் தொடர்பாக யாழில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

’யாழ் கானம் நிகழ்ச்சி வெகு சிறப்பாக முற்றவெளியில் நடந்திருக்கின்றது. யாழ்ப்பாண மக்கள்எமக்குநிறையவேஆதரவைத் தந்தார்கள்.

நிகழ்வின் ஆரம்பத்தில் மாவீரர்களுக்கும், போரின் போது இறந்தவர்களுக்கும் ஒரு நிமிடம் மௌனஅஞ்சலிசெலுத்திஇருந்தோம், நிகழ்வுக்கு மக்களுடைய ஆதரவு நிறையவே கிடைத்திருந்தது.

ஒவ்வொரு வருடமும் இந்த யாழ் கானம் இடம்பெற வேண்டும் என்பதற்காக அடுத்த கட்ட நடவடிக்கையை எடுத்து வருகின்றேன்.

எமக்கு ஆதரவ வழங்கிய ஊடக நண்பர்கள்உள்ளிட்டஅனைவருக்கும் எனது நன்றிகள்’ என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.10.2023இல் வெளியிடப்பெற்றது.